## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

**முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவையாறு

**2026–ம் வருடம் மார்ச் மாதம், 17–ம் நாள், செவ்வாய்க்கிழமை**

**Crl.M.P.No.16/2026**

கார்த்தி, வயது 24/2026
த.பெ. சுப்ரமணி ...மனுதாரர்/எதிரி

//இடையே//

அரசுக்காக:–
காவல் உதவி ஆய்வாளர்,
பூதலூர் காவல் நிலை
கு.எண்.252/2025 ...குற்றமுறையிடுபவர்

இம்மனுவானது இன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A. ராஜராஜன், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும் அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி தரப்பில், கடந்த 05.12.2025–ம் தேதிய நீதிமன்ற உத்தரவின் பேரில், மனுதாரர்/எதிரி பூதலூர் காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு தொடர்ந்து கையெழுத்திட்டு வருவதாகவும், நிபந்தனையை தளர்த்தக் கோரியும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனையில், எதிரிக்கு பிணை நிபந்தனை தளர்வு (Condition Bail Relaxation) வழங்கினால் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை கலைக்கக்கூடும் என்றும், வழக்கின் புலன் விசாரணை முடிவடையவில்லை என்றும், உத்தரவு தேதியிலிருந்து எதிரி தொடர்ந்து கையெழுத்திட்டு வருவதாகவும், எதிரிக்கு பிணை நிபந்தனை தளர்வு வழங்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:57:07 +0530

வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில், மனுதாரருக்கு விதிக்கப்பட்ட பிணை நிபந்தனையில், மனுதாரர் கடந்த 05.12.2025–ம் தேதிய உத்தரவிற்கு பின்னிட்டு, மனுதாரர்/எதிரி பூதலூர் காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு தொடர்ந்து கையெழுத்திட்டு வருவதை கருத்தில் கொண்டும், புலன் விசாரணை இன்னும் முடிவடையவில்லை என்று சொல்லப்பட்டதை கருத்தில் கொண்டும், மனுதாரர்/எதிரி நிபந்தனையை கடைபிடித்துள்ளதையும், மனுதாரரின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டும், நிபந்தனையை தளர்வு செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

**மனுதாரர்/எதிரி, தினமும் காலை கிழமை காலை 10.00 மணிக்கு மறு உத்தரவு வரும்வரை காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்று நிபந்தனை முழுவதுமாகதளர்வு செய்யப்படுகிறது. பிணை மனுவில் உள்ள இதர நிபந்தனைகளில் எவ்வித மாற்றமில்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கி சரிசெய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 17–ம் நாளான இன்று அவையறியப்பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.03.17 19:57:13 +0530

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.